DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு மே மாதம் திங்கள்கிழமை 12 ம் நாள் சாட்சியாகிய வேல்முருகன் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10 வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வேல்முருகன் | வயது | 39 |
| த/பெ. | சுப்பிரமணி | இனம் | ஆண் |
| கிராமம் | கிழவனம் | தொழில் | தனியார் நிறுவனத்தில் வேலை |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C.111/2023**

(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை).

**முதல் விசாரணை 12.05.2025 அ.சா.4**

1. நான் கிழவனத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 வினாயகம் எனது உறவினர். ஒன்னரை வருடங்களுக்கு முன்பு வினாயகத்துக்கும், அவரது தம்பிக்கும் சண்டை நடந்தது. வினாயகத்துக்கு தலையில் அடிபட்டது. நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள மஞ்சள் நிற டீ சர்ட் அணிந்த நபர் வினாயகத்தின் தம்பி. (சாட்சி, 1 வது எதிரியை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார்). எனது மனைவிதான் என்னிடம் சம்பவம் பற்றி தெரிவித்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2. எதிரிகள் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.